

# சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயம் (1897 - 1997)

**இதனையொட்டி சுவாமிஜி யாழ்ப்பாணத்தில் ஆற்றிய சிறப்புரையும் அடங்கிய மலராக வெளியிடப்படுகிறது.**

(தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் ஜன்மதினத்தன்று
1—1—97ல் வெளியிடப்பட்டது.)

உ



வணக்கத்துக்குரிய

# ஸ்ரீமத் சுவாமி பூதேஷானந்தர் மகராஜ்

[தலைவர், ஸ்ரீராமகிருஷ்ண மடம், கல்கத்தா]

# இம்மலரை இவரது திருவடியில் சமர்ப்பிக்கின்றோம்

ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்
பருத்தித்துறை.
1 - 1 - 1997

## மாண்புமிகு, இந்துசமயத் துறவி

# சுவாமி விவேகானந்தர்

## யாழ். இந்துக் கல்லூரியில்

## ஆற்றிய உரை.

விஷயமோ மிகப்பெரிது. காலமோ குறுகியது. ஒரு உபன்னியாசத்தில் இந்து மதக்கொள்கைகள் அனைத்தையும் எடுத்துரைக்க முடியாது. ஆதலால் என்னாலியன்ற வரையில் எளிய நடையில், அதன் முக்கிய அம்சங்களை மாத்திரம் எடுத்துச் சொல்ல முயற்சி செய்கிறேன். இந்துக்கள் என்று நம்மை நாம் அழைத்துக் கொள்வது இப்பொழுது வழக்கமாயிருக்கிறது. ஆனால் அதன் பொருள் வேறு. சிந்து நதியை ஹிந்து என்று பழங்காலப் பாரசீகர்கள் உச்சரித்தார்கள். சிந்து நதிக்கு அக்கரையிலிருப்பவர்களை ஹிந்துக்கள் என்று அவர்கள் அழைத்தார்கள். அந்தப்பெயர் இன்னும் வழங்கி வருகிறது. முகம்மதியர் ஆட்சியின் போது அப்பெயரையே நாம் ஏற்றுக் கொண்டோம். இப்பெயரை ஏற்றுக்கொள்வதில் தவறு ஒன்றுமில்லை. ஆனால் அதற்குமுன் கொடுக்கப்பட்ட பொருள் இப்பொழுது மாறிவிட்டதென்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அவ்வார்த்தையின் பழைய பொருளின்படி அது, சிந்துநதிக்கு இக்கரையிலிருக்கும் நம்மதத்தைப் பின்பற்றாத முகம்மதியர்களையும் கிறிஸ்தவர்களையும் கூடக் குறிக்கலாம். எனவே தான் அப்பெயரை உபயோகிக்க விரும்பவில்லை. இதை உபயோகிக்க விரும்ப வில்லையெனில், வேறு எப்பெயரை உபயோகப் படுத்துவது? வைதிகர்கள், அதாவது வேதத்தைப் பின்பற்றுகிறவர்கள் என்று சொல்லலாம். வேதாந்திகள் அதாவது வேதாந்தத்தைப் பின்பற்றுகிறவர்கள் என்று சொல்வது இன்னும் பொருத்தமாக இருக்கும். எல்லா மதங்களும் கடவுளால் அருளப்பெற்றதென்று கருதப்படும் சில நூல்களைப் பெற்றிருக்கின்றன. அந்நூல்கள் அம்மதங்களுக்கு அடிப்படையாகவிருந்து வருகின்றன. இவைகள் அனைத்திலும் பழமையானவை நம் வேதங்களென்பது மேல் நாட்டு ஆராய்ச்சிக்காரர்களின் முடிபு. ஆதலால் வேதங்களைப்பற்றி நாம் கொஞ்சம் தெரிந்து கொள்ள வேண்டும்.

வேதங்கள் என்று சொல்லப்படுகின்ற இந்நூல்கள் மனிதர்களால் உண்டாக்கப்பட்டவையல்ல. அவை எப்பொழுது எழுதப்பட்டவையென்பது ஒருவருக்கும் தெரியாது. ஒருவரும் நிர்ணயம் செய்யவும் முடியாது. நம் ஐதீகத்தின்படி அவை சாசுவதமானவை. ஒரு முக்கியமான விஷயத்தை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். உலகிலுள்ள மற்றெல்லா மதங்களும் ஒரு தெய்வம், அல்லது தெய்வத்தின் அருள் பெற்ற ஒருவர் செய்த உபதேசங்களை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. ஆனால் வேதங்கள் எந்தத் தனி மனிதனுடைய உபதேசங்களையும் அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை. அவைகள் கடவுளைப்பற்றிய ஞானத்தையுடையதாய் யிருப்பதால், அவை சாசுவதமாக இருந்து, அவைகளே நம் மதத்திற்கு அதிகாரமாகவும் விளங்குகின்றன. அவை ஒருகாலத்தில் உண்டாக்கப்பட்டனவென்று சொல்ல முடியாது. அவை என்றும் அழியாமலிருப்பவை. உலகம் ஆரம்பமும் முடிவுமின்றி சாசுவதமாக விருப்பது போல், கடவுளைப்பற்றிய இந்த ஞானமும் அழிவற்றது. இந்த ஞானத்திற்குத் தான் வேதம் என்று பெயர். வேதாந்தம் என்று சொல்லப்படுகிற இவ்வுண்மைகள் ரிஷிகளால் கண்டு பிடிக்கப்பட்டவை. ஆத்மீக உண்மைகளைக் காணும் பெரியோர்கள் ரிஷிகளாகக் கருதப்பட்டார்கள். அந்த உண்மை அவர்களுடையதென்று நினைக்கக் கூடாது. வேதத்தில் ஒரு மொழி ஒரு ரிஷியிடமிருந்து வந்ததெனில் அதை அவர் எழுதினார் அல்லது தன் மனதிலிருந்து உண்டாக்கினார் என்று நினைக்கலாகாது. முன்னமேயே கற்பகோடி காலமாக அவ்வுண்மை இருந்து வந்திருக்கிறது. அவர் அதைக் கண்டார்; அவ்வளவு தான். ரிஷிகள் ஆத்மீக உண்மைகளைக் கண்டுபிடிப்பவர்கள்.

வேதங்கள் இரண்டு பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அவை கர்மகாண்டம் ஞானகாண்டம் என்பன. கர்மகாண்டம் பலவிதமான யாகங்களைப் பற்றிச் சொல்லுகிறது. இந்தப் பாகங்கள் தற்காலத்தில் சாத்தியமானவையல்ல வென்று விடப்பட்டவை. இன்னும், மனிதனுடைய கடமைகள், இல்லற தருமம், துறவற தருமம் முதலியவைகளைப் பற்றியும் வேதங்கள் சொல்லுகின்றன. இவை இன்றும் பெரும்பாலும் பின்பற்றப்படுகின்றன. ஞானகாண்டத்தில் தான் நம் மதத்திற்கு அடிப்படையான வேதத்தின் சாரம் இருக்கிறது. வேதத்தின் சாரம் தான் வேதாந்தம் எனப்படுவது. வேதாந்தத்தில் உபநிடதங்கள் அடங்கியிருக்கின்றன. இந்து மதத்திலுள்ள எல்லாப் பிரிவினர்களும்—

துவைதிகள் விசிஷ்டாத்துவைதிகள் அல்லது அத்வைதிகள், சைவர்கள், வைஷ்ணவர்கள், சாக்தர்கள், சௌரர்கள் அல்லது கணபதியர்கள் முதலிய அனைவரும் உபநிடதங்களின் அதிகாரத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும். தங்கள் விருப்பம் போல் அவைகளுக்குப் பொருள் செய்து கொள்ளலாம்; ஆனால் அவைகளின் அதிகாரத்தை ஏற்றுத்தானாக வேண்டும். இதன் காரணமாகத்தான் இந்து என்பதற்குப் பதிலாக வேதாந்திகள் என்று தம்மை அழைத்துக் கொள்ளலாம் என்று நாம் சொல்லுகிறோம். நம்முடைய ஆசாரியர்கள் அனைவரும் வேதாந்தத்தின் அதிகாரத்தை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். நம் தற்கால மத ஆசாரங்களின் ஆரம்பம் அனைத்தும் உபநிடதங்களில் இருப்பதை நன்கு கற்றவர்கள் உணர்வார்கள். உபநிடதங்கள் நம்மக்கள் மனதில் மிக ஆழ்ந்து பதித்திருக்கின்றன. நம்மிடமுள்ள சில குரூரமான அனுஷ்டானங்கள் கூட உபநிடதங்களின் உண்மைகளை உருவகங்களின் மூலம் ஸ்தூலமாக வெளிப்படுத்தச் செய்த முயற்சிகளாக விருக்கின்றன. இதைக்காண ஆச்சரியமாயிருக்கும். நம் வீடுகளில் செய்யப்படும், பூசனை முறைகளில் கூட உபநிடதக் கருத்துகள் கலந்திருக்கின்றன. இங்ஙனம் பூஜா முத்திரைகளாகவும் வேறு ரூபங்களிலும் இவை நாடு முழுவதும் வியாபித்திருக்கின்றன.

வேதாந்தத்திற்கு அடுத்த படியில் ஸ்மிருதிகள் இருக்கின்றன. இவைகளும் பெரியோர்களால் எழுதப்பட்டவை யெனினும் இவை வேதாந்தத்திற்கு உட்பட்டவை. வேதாந்தத்திற்கு முரணாக ஏதாவது ஸ்மிருதியிலிருந்தால், அந்த ஸ்மிருதியை நிராகரிக்க வேண்டும். அத்தகைய ஸ்மிருதிக்கு யாதொரு அதிகாரமும் இல்லை. ஸ்மிருதிகள் காலத்திற்குக் காலம் மாறுபடுவதைக் காண்கிறோம். சில ஸ்மிருதிகள் சத்தியயுகத்திலும், சில திரேதாயுகத்திலும், சில துவாபரயுகத்திலும், சில கலியுகத்திலும் பின்பற்றப்பட வேண்டுமெனப் படிக்கிறோம். நம் தேசத்தின் நிலைமையும் சந்தர்ப்பங்களும் மாற, அத்துடன் மக்களுடைய பழக்க வழக்கங்களும் மாறின. எனவே மக்களுடைய பழக்க வழக்கங்களைப் பாகுபடுத்தும் பொருட்டுத் தோன்றிய இந்த ஸ்மிருதிகளும் மாறவேண்டியிருந்தன. வேதாந்தத்தில் சொல்லப்படும் நம் மதத்திற்கு அடிப்படையாக விருக்கும் ஆத்மீகத் தத்துவங்கள் என்றும் மாறாதவை. ஏனெனில், அவை என்றும் மாறமுடியாத — மனிதனிடத்திலும் இயற்கையிலுமிருக்கும் — சாசுவதமான தத்துவங்களின் மேல் நிற்கக் கூடியவை. அவை ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்னும் அப்படியே தானிருந்தன. இன்னும் பல்லாயிரக்

கணக்கான வருஷங்களுக்குப் பின்னும் அப்படியே தானிருக்கப் போகின்றன. ஆனால் சமூகத்தைப்பற்றியிருக்கும் சில மதக்கோட்பாடுகள் சமூக மாறுதல்களுடன் மாறியாக வேண்டும். அவை ஒரு காலத்தில் நன்மை செய்து, வேறு ஒரு காலத்தில் பயனற்றுப் போய் விடலாம். உதாரணமாக ஒரு காலத்தில் ஓர் உணவு நல்லதெனச் சொல்லப்படுகிறது. சீதோஷ்ண ஸ்திதியும் சுற்றுப்புறங்களும் மாறுபடலாம்; அத்துடன் உணவும் மாறவேண்டியிருக்கலாம். எனவே ஸ்மிருதியும் அதற்குத் தகுந்தவாறு மாறிற்று. இங்ஙனமே தற்காலத்திலும் மாறுதல்கள் செய்ய வேண்டியிருந்தால் அவைகளை அவசியம் செய்யத்தான் வேண்டும். பெரியோர்கள் தோன்றி அதற்கு வழிகாட்டுவார்கள். ஆனால் நம்மதத்தின் அடிப்படையான கொள்கைகள் எள்ளளவும் மாறா.

இவைகளுக்குப் பிறகு புராணங்களிருக்கின்றன. இவை உலக சிருஷ்டி, சரித்திரம் முதலிய விஷயங்களைப்பற்றியும், பல தத்துவங்களைப்பற்றியும் உருவகப்படுத்திச் சொல்லுகின்றன. வேத உண்மைகளைச் சாதாரண மக்களுக்குச் சுலபமாக விளக்குவதற்காக இவை எழுதப்பட்டன. வேதங்களின் பாஷை மிகப் பழமையானது. பெரிய பண்டிதர்களால் கூட அவை எப்பொழுது எழுதப்பட்டனவென்று கண்டுபிடிக்க முடியாது: புராணங்கள் அக்காலத்து மக்களின் பாஷையில் எழுதப்பட்டன — அதாவது தற்கால சமஸ்கிருதத்தில் சாதாரண மக்களுக்கு தத்துவ சாஸ்திரம் எளிதில் புரியாது. எனவே இவ்வுயர்ந்த உண்மைகள், மக்கள் எளிதில் அறிந்து கொள்ளத்தக்க முறையில் பெரியோர்களுடைய வாழ்க்கைக் கதைகள் வாயிலாகவும் சரித்திரத்தின் வாயிலாகவும் எழுதப்பட்டன. இப்புராணங்களை எழுதிய பெரியோர்கள் ஆத்மீகத் தத்துவ உண்மைகளை இம்முறையில் புகட்ட முயற்சி செய்தார்கள்.

இவைகளைத் தவிர தந்திர (*Tantras*) நூல்களிருக்கின்றன. சில அம்சங்களில் இவை புராணங்களை ஒத்திருக்கின்றன. சில தந்திரங்களில் கர்ம காண்டத்தில் காணப்படும் பழைய யக்ஞங்களைப் பழக்கத்திற்குக் கொண்டுவர முயற்சி செய்யப்பட்டிருக்கிறது.

இவையனைத்தும் இந்துக்களின் மதசம்பந்தமான சாஸ்திரங்களாக விருக்கின்றன. ஒரு சமூகம் இவ்வளவு சாஸ்திரங்களை உடைத்தாயிருந்து, அது தன் சக்தியில் பெரும் பகுதியை ஆத்மீக விஷயங்

களிலும் தத்துவ ஆராய்ச்சியிலும் செலவு செய்து கொண்டிருக்கும் போது, அதில் இவ்வளவு அதிகமான உட்பிரிவுகள் இருப்பது ஆச்சரிய மான விஷயமன்று. இன்னும் ஆயிரக்கணக்கான அதிக உட்பிரிவுகள் இல்லாமையே ஆச்சரியமான விஷயமாகும். இவ்வுட் பிரிவுகள் ஒன்றுக் கொன்று சிற்சில விஷயங்களில் வேறுபட்டிருக்கின்றன. அவைகளின் வேறுபாடுகளைப்பற்றி ஆராய்வதற்குப் போதுமான காலம் நமக் கில்லை. இவையனைத்திற்கும் அடிப்படையாக விருக்கக் கூடியதும், ஒவ்வொரு இந்தவும் ஏற்கவேண்டியதுமான முக்கியமான தத்துவங்கள் சில உள. அவற்றை இங்கு எடுத்துக் கூறுகிறேன்.

முதலாவதாக உலக சிருஷ்டியை எடுத்துக் கொள்ளுவோம். இந்த இயற்கை – பிரகிருதி, மாயை என்று பலவாறாக அழைக்கப் படுவது – ஆரப்பமும் முடிவு மற்றது ஏதோ ஒருநாள் கடவுள் வந்து இவ்வுலகை உண்டாக்கினார். அதற்குப் பிறகு உறங்கப் போய் விட்- டார் என்பதல்ல. அது உண்மையாக இருக்க முடியாது. இயற்கை யின் ஆக்கும் சக்தி இடைவிடாமல் வேலை செய்து கொண்டிருக்கிறது, கடவுள் ஓய்வின்றி சிருஷ்டி செய்து கொண்டே இருக்கிறார். கீதையில் ஸ்ரீ கிருஷ்ண பகவான் சொல்லுவதை ஞாபகப் படுத்திக் கொள்ளுங்கள். 'நான் ஒரு கணமேனும் வேலை செய்யாமலிருந்தால், உலகம் அழிந்து விடும். நம்மைச் சுற்றிலும் அல்லும் பகலும் வேலை செய்து வரும் ஆக்கும் சக்தி ஒரு வினாடி நின்றாலும் உலகம் அழிந்து விடும்". அகிலமுழுதும் அச்சக்தி வேலை செய்யாத காலமே கிடையாது ஆனால் அது மாறி மாறி அழிந்தும் தோன்றிக் கொண்டுமிருக்கும். சிருஷ்டியென்ற பதத்திற்கு ஆங்கிலத்தில் சரியான வார்த்தை இல்லை. அதற்காக வழங்கப்படும் ஆங்கில வார்த்தை (Creation) ஒன்று மின்மையிலிருந்து உலகம் உண்டாக்கப்பட்டதென்ற பொருள் கொடுக் கிறது. இதை நம்பும்படி சொல்லி உங்கள் அறிவை நான் அவமதிக்க மாட்டேன். நம் சாஸ்திரங்களின்படி, இயற்கை சில சமயங்களில் சூட்சமமாகி அடங்கி விடுகிறது. கொஞ்சக் காலத்திற்குப் பிறகு ஸ்தூலமாகி மறுபடியும் வெளிப்படுகிறது, இது சமுத்திரத்தில் அலை கள் அடங்குவதும் தோன்றுவதும் போன்றதாகும். இந்த அனந்த கற்பகோடி காலத்தில் இயற்கையும் பல தடவைகளில் அடங்கித் தோன்றியிருக்கின்றது. காலம், தேசம், நிமித்தம் அனைத்தும் இவ் வியற்கைக்கு உட்பட்டன. எனவே சிருஷ்டிக்கு ஆரம்பமும் முடிவும் உண்டெனச் சொல்வது மதியீனம். ஆதலால் சிருஷ்டியின் ஆரம்பம்

அல்லது முடிவு என்ற வார்த்தைகள் நம் சாஸ்திரங்களில் உபயோகப் படுத்தப்பட்டால் அதை இந்தக் கற்பத்தின் ஆரம்பம் அல்லது முடிவு என்று கொள்ள வேண்டும்.

இங்ஙனம் சிருஷ்டி செய்வது யார்? கடவுள். கடவுள் என்ற பதத்திற்குப் பொருள் என்ன? அதற்கு ஆங்கில பாஷையில் சாதாரண மாகக் கொடுக்கப்படும் அர்த்தத்தில் நான் அப்பதத்தை உபயோகப் படுத்தவில்லை. அதைவிடப் பொருத்தமான வேறுபதம் ஆங்கிலத்தில் கிடையாது. பிரம்மம் என்ற சமஸ்கிருதப் பதத்தை உபயோகப்படுத் துவது இன்னும் பொருத்தமாக இருக்கலாம். அவர்தான் இச்சிருஷ் டிக்குக் காரணமென்று சொல்ல வேண்டும். அவர் நித்தியமானவர், குற்றங்குறைவற்றவர், என்றும் விழிப்புடனிருப்பவர், அளவற்ற கருணை படைத்தவர், சர்வசக்தி ஞானமும் வாய்ந்தவர், எங்கும் நிறைந்தவர், உருவமற்றவர். அவர் இவ்வுலகை உண்டாக்குகிறார். அவரே இவ்வுலகை உண்டாக்கிக்கொண்டிருக்கிறார் என்றால் இரண்டு சங்கடங்கள் தோன்றுகின்றன: இவ்வுலகில் ஏற்றத் தாழ்விருப்பதைக் காண்கிறோம். ஒருவன் செல்வத்திலும். சந்தோஷத்திலும் பிறக்கிறான் மற்றொருவன் வறுமையிலும், துக்கத்திலும் பிறக்கிறான். இது பட்சபாதமல்லவா? தாரை உலகில் கொடுமை நிறைந்திருக்கிறது. பிறந்த அனைத்தும் சாகவேண்டும். ஒரு பிராணி மற்றொன்றைக் கொன்று வாழ்கிறது. ஒவ்வொரு மனிதனும் தன் சகோதரமனிதனிடம் போட்டியிட்டு வெல்லப் பிரயத்தனம் செய்கிறான். இவ்விதமான போட்டி, கொடுமை, கோரம் இரவும், பகலும் இருதயத்தைப் பிளக் கும் துக்கம்.

இதுதான் உலக வாழ்க்கையின் தன்மையாகவிருக்கிறது. இது கடவுள் சிருஷ்டியாகவிருந்தால், அந்தக் கடவுள் [மிகக் குரூரமான வராக இருக்க வேண்டும்; மனித சிந்தனைக்குத் தோன்றக்கூடிய மிகக் கொடிய பிசாசைவிடக் கொடுமையாகவிருக்க வேண்டும். ஆனால் இப்போட்டியும் வித்தியாசமும் கடவுளால் உண்டானவையல்லவென்று வேதாந்தம் உரைக்கின்றது. அப்படியாயின், அதற்குக் காரணம் யார்? நாமேதான். ஊர் முழுவதும் மழை பெய்கிறது நன்றாகப் பண்படுத் தப்பட்ட பூமி அதன் முழுப்பயனையும் பெறுகிறது. நன்றாகப்பண் படுத்தப்படாத பூமி அவ்வளவு பயன்பெறுவதில்லை. அது மழையின் குற்றமா? கடவுளின் கருணை வெள்ளம் எல்லையற்றது; நிலை

பெற்றது; எல்லோர்பாலும் அது பொழிந்து கொண்டிருக்கிறது' வித்தியாசம் நம்மிடம் தானிருக்கிறது. ஆனால் ஒருவர் சந்தோஷத்துடனும் ஒருவர் துக்கத்துடனும் பிறப்பானேன்? அவர்களின் சென்ற பிறப்பின் வாழ்க்கையின் வித்தியாசமே இப்பிறப்பின் வித்தியாசத்திற்குக் காரணமாயிருக்கிறது.

இப்பொழுது நாம் இரண்டாவது தத்துவத்திற்கு வருகிறோம்' அது இந்துக்களால் மட்டுமல்லாமல் பௌத்தர்களாலும் ஜெயினர்களாலும் ஒப்புக்கொள்ளப் பட்டது. நமது ஆத்மா நித்தியமானதென்பதை இவர்கள் எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். உயிர் ஒன்றுமில்லாச் சூனியத்திலிருந்து பிறந்திருக்க முடியாது. காலவரைக்குட்பட்டுப் பிறந்த அனைத்தும் இறந்தாக வேண்டும். உயிர்நேற்றுத் தோன்றியதெனில், அது நாளை அழிவது நிச்சயம். ஆனால் உயிர் என்றும் அழியாமலிருப்பது தற்கால விஞ்ஞான சாஸ்திரங்கள் ஸ்தூல உலகிலுள்ள உதாரணங்களைக் கொண்டு நம் சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கும் இவ்வுண்மையை விளக்குகின்றன. நாம் ஒவ்வொருவரும் நமது எல்லையற்ற பழைய பிறப்புகளின் பயனாக இருக்கிறோம். ஒரு குழந்தை பிறக்கும் போது, சில கவிஞர்கள் அழகாக உரைப்பது போல் இயற்கையின் மடியிலிருந்து அது புதிதாகத்தோன்றுவதில்லை. தன் பழங்காலக் கர்மங்கள் அனைத்துடனும் அது பிறக்கின்றது. நல்லதோ கெட்டதோ அப்பழைய கர்மங்களைத் தீர்ப்பதற்காக அவன் ஜென்மம் எடுக்கிறான். இப்பழைய கர்மங்களில் மனிதனுக்கு மனிதன் வித்தியாசமிருக்கிறது. இதுதான் கர்மவிதி எனப்படுவது. நாம் ஒவ்வொருவரும் நம் விதியை நாமேயுண்டாக்கிக் கொள்ளுகிறோம். எனவே மனித வாழ்க்கை முன்னமேயே நிர்ணயம் செய்யப்படுகிறது அல்லது வாழ்க்கை நாம் அறியாத ஒரு விதிப்படி நடக்கிறது என்ற கொள்கைகள் மறுக்கப்படுகின்றன. தவிரவும் கடவுள் பட்சபாத முள்ளவரல்லரென்பதையும் இது தெரிவிக்கிறது. நாம் தான் நம் கஷ்டங்களுக்குக் காரணம். நாம் முந்திய வினைகளின் பயனாகவிருக்கிறோம். அது போல எதிர்கால வாழ்க்கையையுண்டாக்குவதற்குக் காரணமாகவும் இருக்கிறோம். ஆதலால் நாம் சுயேச்சையுடன் இருக்கிறோம். நான் துக்கத்துடன் இருந்தால், அந்நிலையை நானே தான் செய்து கொண்டேன். எனவே நான் விரும்பினால் சந்தோஷமாகவும் இருக்க முடியும். நான் *தூய்மையற்றவனாக விருந்தால் அதற்கு நான் தான் காரணம்; நான் விரும்பினால் பரிசுத்தமாக

வும் இருக்க முடியும். மனிதனின் உள்ளம் அளவற்ற சக்தி வாய்ந்தது. மனிதனுள்ளத்திலிருக்கும் எல்லையற்ற மகத்தான சக்திக்கெதிராக எதுவும் - இயற்கைகூட - நிற்க முடியாது. யாவும் பணிந்து தான் ஆகவேண்டும். கர்மவிதியின் பயன் இது தான்.

அடுத்த கேள்வி ஆத்மா என்றால் என்ன என்பது. நம்முடைய ஆத்மாவை அறிந்து கொள்ளாமல் நாம் கடவுளை அறியமுடியாது. வெளி இயற்கையின் ஆராய்ச்சிமூலம் மறுமையைப்பற்றி அறிய இந் நாட்டிலும் வெளி நாடுகளிலும் முயற்சிகள் செய்யப்பட்டன. ஆனால் அவையனைத்தும் பயனற்றுப் போயினவென்பதை நீங்கள் அறிவீர்கள். ஸ்தூலப் பொருள்களில் அதிகம் பழகப்பழக நம் மனதும் அதிக ஸ்தூலமாகிறது; அதன் காரணமாக நம்மிடமிருக்கும் ஆத்மீக சக்தி குன்றத் தலைப்படுகிறது. எனவே ஆத்மீக உணர்ச்சியும் உயர் வாழ்வும் பெறுவதற்கு அது மார்க்கமல்ல. இதை மனித இதயத்தின் மூலமும் ஆத்மாவின் மூலமும்தான் அடைய முடியும். புற விஷயங்கள் அவ்வெல்லையற்ற பரம்பொருளைப்பற்றி நமக்குப் போதிக்க முடியாது. நம்முள்ளிருக்கும் ஆத்மா மூலம்தான் அதைக்காண இயலும். நம் ஆத்மாவை ஆராய்ச்சி செய்வதன் மூலம்தான் நாம் கடவுளை உணர முடியும். ஆத்மாவின் இயல்பைப்பற்றி இந்திய மதப் பிரிவுகளுக்குள் அபிப்பிராய பேதமிருக்கிறது. அவை அனைத்திற்கும் பொதுவான சில அம்சங்களும் உண்டு. ஆத்மா ஆரம்பமும் முடிவும் அற்றது; சர்வ சக்தியும் தூய்மையும் ஞானமும் ஒவ்வொரு ஆத்மாவிலும் புதைந் திருக்கிறதென்பதை அனைவரும் ஒப்புக்கொள்ளுகிறோம். இம்மகத் தான தத்துவத்தை நாம் எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு மனித அல்லது மிருகத்தின் உள்ளத் திலும், அவர்கள் எவ்வளவு தாழ்ந்து அல்லது பலவீனமாயிருந்த போதிலும், அதே மகத்தான, சர்வ வல்லமை பொருந்திய ஆத்மா குடிகொண்டிருக்கின்றது. நமக்குள்ளிருக்கும், வித்தியாசத்திற்குக் கார ணம் நம் உள்ளத்திலிருக்கும் ஆத்மாவின் வித்தியாசம் அல்ல; ஆனால் அந்த ஆத்மாவின் சக்தியை வெளிப்படுத்துவதிலுள்ள வித்தியாசம் தான். எனக்கும் மிகச் சிறிய ஒரு பிராணிக்குமுள்ள வித்தியாசம் இவ்வாத்மாவின் சக்தியை வெளிப்படுத்துவதிலுள்ள வித்தியாசம்தான். அடிப்படையாக நானும் அதுவும் சமமே; நானும். அதுவும் சகோத ரர்கள் போன்றவர்கள்: அதுவும், நானும் ஒரேவிதமான ஆத்மாவைப் பெற்றிருக்கிறோம். இந்தியா உபதேசித்திருக்கும் தத்துவங்கள் அனை

வற்றிலும் இதுதான் மிகச் சிறந்தது. மனிதர்கள் அனைவரும் சகோதரர்கள் என்று வெளிநாடுகளில் சொல்லுகிறார்கள். மனிதனிலிருந்து எறும்புவரை எல்லா உயிர்களும் சகோதரத் தன்மையுடையன என்று இந்தியா கூறுகின்றது. 'ஞானிகளாயிருப்பவர்கள் ஒரே கடவுள் எல்லா உயிர்களிலும் குடிகொண்டிருக்கிறார் என்பதையுணர்ந்து, அனைவரையும் கடவுளாக வணங்குவார்கள்' என்று நமது சாஸ்திரங்கள் சொல்லுகின்றன. இதன் காரணமாகவே இந்தியாவில் ஏழை மக்கள்பாலும், மிருகங்கள்பாலும், மற்ற அனைத்தின் பேரிலும் கருணை நிறைந்த கருத்துக்கள் இவ்வளவு பரவியிருக்கின்றன.

ஆத்மாவைப் பற்றி இன்னுமொரு விஷயம். ஆங்கிலத்தில் இவ்விஷயங்களைப் படிப்பவர்களுக்கு ஆத்மா, மனது என்ற வார்த்தைகளில் குழப்பமுண்டாகிறது. நாம் மனது என்று குறிப்பிடுவதை அவர்கள் ஆத்மாவென்று சொல்லுகிறார்கள். சுமார் இருபது வருஷங்களுக்கு முன். சமஸ்கிருத தத்துவ சாஸ்திரங்களிலிருந்து அறிந்துகொண்டதற்கு முன் அவர்களுக்கு ஆத்மாவைப் பற்றித் தெரியாது. உடலுக்கு மேம்பட்டது மனம், ஆனால் மனம் ஆத்மாவல்ல. மனம் சூட்சும சரீரமாயிருந்து, பிறந்து, இறக்கிறது. மனதுக்குமேல் ஆத்மா இருக்கிறது. ஆத்மா என்ற பதத்திற்கு ஆங்கிலத்தில் சரியான வார்த்தை இல்லை. எனவே ஆத்மாவென்ற வார்த்தையையே உபயோகப்படுத்துவோம். ஆத்மாவென்பது மனதிலிருந்தும் உடம்பிலிருந்தும் வேறுபட்டதென்பதை நீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். ஆத்மா மனமாகிய சூட்சும சரீரத்துடன் பிறந்து இருக்கிறது. உரிய காலத்தில் ஞானத்தைப் பெற்று, பூரணத்துவத்தையடைந்தால் பிறப்பு இறப்பிலிருந்து விடுதலை பெறுகிறது. அதற்குமேல் அது மனமாகிய சூட்சும சரீரத்தை வைத்துக் கொள்ளலாம். அல்லது அதை விடுத்து நித்திய சுதந்திரத்துடன் வாழலாம். ஆத்மாவின் லட்சியம் முக்தி அல்லது விடுதலை. இது நம் மதத்தின் தனிக்கொள்கையல்ல. நம் மதத்திலும் சுவர்க்கங்களும், நரகங்களும் இருக்கின்றன. ஆனால் அவை என்றும் அழியாதவையல்ல. அவற்றின் இயல்பின்படி அவை வேறு விதமாக இருக்கமுடியாது. சுவர்க்கம் என்று ஒன்றிருப்பதாக விருந்தால் அது உலகத்தைவிடக் கொஞ்சம் அதிக சுகமுள்ளதாகவிருக்கலாம். ஆனால் அது மனித ஆத்மாவுக்குக் கெடுதலைத்தான் உண்டாக்கும். இம்மாதிரிச் சுவர்க்கங்கள் பல இருக்கின்றன. பயனை எதிர்பார்த்து நற்காரியங்கள் செய்கிறவர்கள்

இச்சுவர்க்கங்களில் இந்திரர்களாகவோ வேறு தேவர்களாகவோ பிறக்கிறார்கள். இப்பெயர்கள் தனி நபர்களின் பெயர்கள் அல்ல. பலவிதமான நிலைகளின் பெயர்கள், ஆயிரக்கணக்கான இந்திரர்கள் இருக்கலாம். நகுலன் என்பவன் ஓர் அரசன், அவன் இறந்து இந்திரனானான். அது ஒரு பதவி, ஒருவன் இந்திரப் பதவியை அடைந்தால், அங்கு சிலகாலம் இருந்த பிறகு, இறந்து மறுபடியும் மனிதனாகப் பிறப்பான். எல்லாவற்றிற்கும் உயர்ந்தது மானிடப் பிறவிதான். சில தேவர்கள் சுவர்க்க இன்பத்தை விடுத்து உயர்ந்த நிலைமையை அடையப் பிரயத்தனம் செய்யலாம். ஆனால் உலகத்திலுள்ள செல்வம் முதலியவற்றைப் போல் சுவர்க்கத்தின் இன்பமும் பெரும்பான்மையான தேவர்களைத் தாழ்த்துகிறது. எனவே, தங்கள் நற்கருமங்கள் தீர்ந்ததும் அவர்கள் மறுபடியும் இப்புவியில் மானிடராகப் பிறக்கிறார்கள். இவ்வுலகம் கர்ம பூமியாகவிருக்கிறது. இங்குதான் மனித ஆத்மா முக்தியடைய முடியும். எனவே சுவர்க்கங்கள்கூட நாம் வேண்டத்தகுந்தனவல்ல, அதைவிட உயர்ந்தது முக்தி—வீடுதலை, மிக மேலான சுவர்க்கங்களில் இருப்பவர்களும் அடிமைகளாகத்தான் இருப்பதாக நம் சாஸ்திரங்கள் கூறுகின்றன. கேவலம் சுகத்திற்கு அடிமையாகி, மரணத்திற்குட்பட்டு, இருபதினாயிரம் வருஷம் அரசனாகவிருந்தாலும்தான் என்ன பயன்? வெளி இயற்கை, உள் இயற்கை—இவைகளின் பந்தங்களிலிருந்து விடுபட்டிருப்பதே மிக உயர்ந்த வாழ்க்கை. இயற்கை நம் காலில் விழுந்து நமது அடிமையாகவிருக்க வேண்டும். அதற்கு மேல் உடல் இல்லை; ஆதலால் சாவுமில்லை: உடலைப்பற்றிய தாழ்ந்த சந்தோஷமும் இல்லை, ஆதலால் துக்கமும் இல்லை. ஏசற்ற அந்நிலையே மாசற்ற பரிபூரணமான ஆனந்தம் வழங்கும் நிலை. இங்கு நாம் சந்தோஷம் என்று சொல்வது அந்த நித்தியப் பேரின்பத்தில் ஓர் அணுவென்று சொல்லலாம். அவ்வெல்லையற்ற பேரின்பமே நமது இலட்சியமாகும்.

ஆத்மா ஆணுமல்ல பெண்ணுமல்ல. ஆண் பெண் வேறுபாடு உடலைச் சார்ந்தது. இக்கருத்துக்கள் ஆத்மாவிற்குப் பொருந்தா. அவ்விதமே வயதும். அதற்கு வயதுகிடையாது. அது நித்தியமாயிருப்பது அது எப்படி உலகில் தோன்றிற்று? இதற்கு நம் சாஸ்திரங்களில் ஒரு பதில் தான் உண்டு; - அறியாமை தான் அதன் வீழ்ச்சிக்குக் காரணம். அறியாமையின் மூலம் தான் நாம் கட்டுண்டிருக்கிறோம். அறிவு நம் பந்தங்களைப் போக்கும். இந்த ஞானத்தை எவ்விதம் பெற முடியும்?

அன்பின் மூலமும் பக்தியின் மூலமும் பெறலாம். கடவுள் மனித உள்ளங்களில் குடிகொண்டிருக்கிறார். கடவுள் குடிகொண்டிருக்கும் கோவில்களாக நினைத்து எல்லா உயிர்களையும் வழிபடுவதன் மூலம் இந்த ஞானத்தைப் பெறலாம். ஆழ்ந்த அன்பிலிருந்து ஞானம் பிறக்கும். ஞானத்தால் அறியாமை மறையும். அத்துடன் நம் பந்தங்கள் அகன்று ஆத்மா விடுதலையடையும்.

கடவுளைப் பற்றி நம் சாஸ்திரங்களில் இரண்டு கருத்துக்களிருக்கின்றன; — ஒன்று ரூபக் கடவுள், இரண்டாவது, அரூபக் கடவுள், கடவுளை ரூபமாக வழிபடும் போது அவனை சர்வசக்தி வாய்ந்தவனாகவும், இவ்வுலகை ஆக்கிக் காத்து அழிப்பவனாகவும், சகல ஜீவராசிகளுக்கும் அளவற்ற கருணையுடன் தந்தையும் தாயுமாயிருந்து காப்பாற்றுபவனாகவும் நினைக்கிறோம். அவனை அணுகி அவனுடன் வாழ்வதே முக்தி. கடவுளை அரூபமாக வணங்கும் போது அவனை மேற்குறித்த குணங்களுடையவனாக நினைப்பதில்லை. அங்கிங்கெனாதபடி எங்கும் இயங்கும் சக்தியாக அவனை நினைக்கிறோம். அவனை அறிவுள்ளவன் என்று சொல்வதற்கில்லை; ஏனெனில் அறிவென்பது மனிதனுக்கே பொருந்தும். அவனிடம் வாதமும் தர்க்கமும் இல்லை. ஏனெனில் இவை பலவீனத்தின் அறிகுறிகள். அவன் உண்டாக்குகிறான் என்று சொல்ல முடியாது; ஏனெனில் வினைப்பந்தங்களும், விருப்பமும், குறையும் இருப்பவர்கள் தான் உண்டாக்குவார்கள். அவனுக்கு வினைப்பந்தங்கள் ஏது? விருப்பம் ஏது? குறை ஏது? வேதங்களில் 'அவன்' என்ற வார்த்தைகூட உபயோகப்படுத்தப்படவில்லை' ஏனெனில் அவ்வார்த்தை கடவுள் ஆண்பால் என்ற தவறான பொருளைக் கொடுக்கலாம். ஆதலால் 'அது' என்ற பதமே உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. இவ்வழிபாட்டு முறைக்கு அத்வைதம் என்று பெயர்.

நமக்கும் இவ்வரூபக் கடவுளுக்குமுள்ள சொந்தம் என்ன? நாம்தான் அவர். நாமும் அவரும் ஒன்று. எல்லா உயிர்களுக்கும் அடிப்படையாக நின்றிலங்கும் பரம்பொருளின் தோற்றங்களே நாம் யாவரும். இந்த எல்லையற்ற பரம்பொருளிலிருந்து நம்மை வேறாக நினைப்பதே துக்கத்திற்குக் காரணம். முக்தி அல்லது விடுதலையென்பது அதனுடன் ஐக்கியமாவதுதான். சுருக்கமாகச் சொன்னால், இவைதான் கடவுளைப் பற்றி நம் சாஸ்திரங்களிலுள்ள இரு கருத்துக்

கள். இங்கு சில விஷயங்கள் சொல்ல வேண்டும். கடவுள் அரூபியாக எல்லா உயிர்களிலும் இருக்கிறார் என்ற கருத்துத்தான் நீதி சாஸ்திரங்களுக்கு அடிப்படையாக விருக்கிறது. எல்லாத் தேசங்களிலும் 'எல்லா மனிதர்களையும் தன்னுயிர் போல் நினை' என்ற உண்மை சொல்லப் பட்டிருக்கிறது. இந்தியாவில் 'எல்லா உயிர்களையும் தன்னுயிர் போல் நினை என்று சொல்லப்பட்டிருக்கிறது. நாம் மனித உயிருக்கும் மற்ற உயிர்களுக்கும் வித்தியாசம் பாராட்டுவதில்லை. ஆனால் ஏன் மற்ற உயிர்களைத் தம்முயிர் போல் நினைத்து அன்பு செய்ய வேண்டும்? இதற்குக் காரணம் மற்ற சாஸ்திரங்களில் கொடுக்கப்பட வில்லை அதற்குக் காரணம் இங்கு தான் இருக்கிறது. கடவுள் அரூப மாய் எல்லா உயிர்களிலும் இருக்கிறார். எல்லா உயிர்களும் ஒன்று' நான் மற்றவர்களைத் துன்புறுத்துவதன் மூலம் என்னையே துன்புறுத் திக் கொள்ளுகிறேன். மற்றவர்களை நேசிப்பதன் மூலம் என்னையே நேசித்துக் கொள்ளுகிறேன். இதிலிருந்து ஏன் நாம் மற்றவர்களைத் துன்புறுத்தக் கூடாதென்பதற்குக் காரணம் விளங்குகிறது. கடவுள் அரூபமாய் அனைத்திலும் இருக்கிறார் என்ற கருத்துத்தான் நீதி நியதிகளுக்கு அடிப்படையாக விருக்கிறது.

கடவுளை ரூபத்தில் வழிபடுவதில் உண்டாகும் அற்புதமான பக்தியையும், அந்தப் பக்தியானது காலத்தின் தன்மைக் கேற்றவாறு மக்களுக்கு அளிக்கும் அதி ஆச்சரியமான சக்தியையும் நான் நன்றாக உணர்வேன். ஆனால் நமது தேசத்திற்கு இப்பொழுது வேண்டியது அழுகைக் கண்ணீர் அல்ல. பலமே இப்பொழுது நமக்குத் தேவை. எல்லாக்குருட்டு நம்பிக்கைகளையும் மனதினின்று அகற்றி, நாம் அந்த ரூபாதீதமான பரம்பொருளின் அம்சம் என்று நினைக்கும் போது, அது எத்தகைய சக்தியை நமக்கு அளிக்கிறது! என்னை எதுவும் பாதிக் காது. இயற்கை விதிகளைப் பற்றி எனக்குக் கவலையில்லை. சாவு எனக்கொரு விளையாட்டு. மனிதன் தன் எல்லையற்ற, அந்த மற்ற நித்திய பிரகாசத்தில் திகழ்கிறான். ஆத்மாவை ஆயுதங்கள் வெட்ட மாட்டா; தீ எரிக்காது; நீர் நனைக்காது; அது எல்லையற்றது; எங்கும் நிறைந்தது; பிறப்பும் இறப்பும், ஆதியந்தமும் அற்றது. அதன் முன்னிலையில் சூரிய சந்திர மண்டலங்களும் சமுத்திரத்தில் திவலைபோல் தென்படுகின்றன. அதன் தேஜோமய ரூபத்தின் முன்னி லையில் காலமும் இடமும் மறைகின்றன. இத்தகைய மகத்தான ஆத் மாவில் நாம் நம்பிக்கை கொள்ள வேண்டும். அதிலிருந்து பெருஞ்

சக்தி தோன்றும். நாம் நினைத்தபடி ஆகிறோம். உங்களைப் பல வீனர்களென்று நீங்கள் நினைத்தால் பலவீனர்களாவீர்கள். பலமுள்ள வர்களென்று நினைத்தால் பலமுள்ளவராவீர்கள். தாழ்ந்தவர்களென்று நினைத்தால் தாழ்ந்தவர்களாவீர்கள். பரிசுத்தவான்களென்று நினைத் தால் பரிசுத்தவான்களாவீர்கள். அரூபக் கடவுளின் வழிபாடு நம்மை அளவற்ற சக்தியுள்ளவர்கள் என்று நினைக்கச் செய்கிறது. அச்சக்தியை நான் வெளிப்படுத்தாமலிருக்கலாமெனினும், அது என்னுள்ளேயிருக்-கிறது. சர்வ ஞானமும், சக்தியும், தூய்மையும், சுயேச்சையும் என் னுள்ளேயிருக்கின்றன. நான் ஏன் அதைவெளிப்படுத்த முடிகிற தில்லை? அதைச் சரியாக நம்பாததால். அதை நிச்சயமாய் நம்பினால், அது வெளிப்பட்டே தீரும். அரூபக் கடவுள் வழிபாடு நமக்கு இந்த ஞானத்தை அளிக்கிறது. உங்கள் பிள்ளைகளைக் குழந்தைப் பருவத் திலிருந்து தைரியம் கொடுக்கக்கூடிய எண்ணங்கள் ஊட்டி வளர்த்து வாருங்கள். பலவீனமாக்குகின்ற கருத்துக்களையும் வழிபாடுகளையும் அவர்களுக்குக் கற்பிக்காதீர்கள். அவர்களைப் பலமுள்ளவர்களாக்குங் கள். அவர்கள் தன்னம்பிக்கையுடன் ஆண்மையுள்ளவர்களாய் எதையும் ஜயிக்கவும் எதையும் சகிக்கவும் கூடியவர்களாய் இருக்கட்டும். இங்ஙனமாவதற்கு அவர்கள் முதலில் ஆத்மாவின் மகிமையை உணரட்டும். இக்கருத்துக்கள் வேதாந்தத்தில் மாத்திரம் தானிருக் கின்றன. மற்ற மதங்களைப் போல், வேதாந்தம், பக்தி, பூசனை முதலிய பல விஷயங்களையும் போதிக்கின்றது. ஆனால் அதன் போதனைகள் அனைத்திலும் மேலானது ஆத்மாவைப் பற்றிய இந்த அதி ஆச்சரியமான உயிர் கொடுக்கும் எண்ணம் தான்; இம்மகத்தான தத்துவம் உலகில் ஒரு பெரும் புரட்சியை உண்டாக்கும். அத்துடன் விஞ்ஞான சாஸ்திரத்தில் தற்கால ஆராய்ச்சிகளை மததத்துவங்களுடன் சமரசப்படுத்தும்.

நம் மதத்தின் முக்கிய அம்சங்கள் சிலவற்றை உங்களுக்கு இது வரை எடுத்துரைத்தேன். அவைகளின் அனுஷ்டானத்தைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்ல வேண்டும். பல சந்தர்ப்பங்களின் காரண மாய் இந்தியாவில் பல பிரிவுகள் உண்டாயின வென்பதைக் கண்டோம். இவ்வளவு பிரிவுகளிருந்தாலும் அவை ஒன்றுக்கொன்று சண்டையிட்டுக் கொள்வதில்லை. வைஷ்ணவர்கள் அனைவரும் நரகத்திற்குச் செல் வார்களென்று சைவர்கள் சொல்வதில்லை. சைவர்கள் அனைவரும் நரகத்திற்குச் செல்வார்களென்று வைஷ்ணவர்களும் சொல்வதில்லை

'இது எங்கள் வழி; உங்கள் வழி வேறு; கடைசியில் இருவரும் ஒரே யிடத்தில் சந்திப்போம்' என்று இருவரும் சொல்லுவார்கள். அவரவர் கள் தங்கள் இஷ்டதேவதைகளை வழிபடுகிறார்கள். கடவுளை வழி படுவதற்குப் பலமுறைகளிருக்கின்றனவென்று பழங்காலத்திலிருந்து ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கிறது. பல்வேறு விதமான இயல்பை யுடை யவர்களுக்குப் பல்வேறு விதமான வழிபாட்டு முறைகள் அவசியமென் பதும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது. 'உங்களுக்குகந்ததாக விருக்கும் முறை எனக்கு ஏற்றதாக இல்லாமலிருக்கலாம், எனக்குக் கெடுதல் கூடச் செய்யலாம். எல்லோரும் ஒரே முறையைப் பின்பற்ற வேண்டு மென்று சொல்லுவது சரியல்ல. அங்ஙனம் செய்வது சிலருக்குத் தீங் கிழைக்கலாம்; எனவே அதைத் தவிர்க்க வேண்டும். உலகத்தில் எல்லோரும் ஒரே மதத்தையும் ஒரே முறையையும் பின்பற்ற வேண்டிய நிலைமை ஏற்பட்டால், அது மிகுந்த கெடுதல்களை யுண்டாக்கும். அதன் மூலமாக எல்லா மதங்களும் எல்லா ஆத்மீக உணர்ச்சியும் அழிந்துவிடும். பலதிறப்பட்டிருப்பதே உயிர் இருப்பதன் அறிகுறி. வேறுபாடு முற்றிலும் ஒழிந்தால், சிருஷ்டி முற்றுப்பெற்றுவிடும். நம் இயல்புக்குத் தகுந்தவாறு நம் கருத்துக்களிருக்க வேண்டும். அதன் மூலம் தான் நாம் வளருவோம். ஆனால் இந்த வேறுபாட்டின் காரண மாக ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொள்ள வேண்டிய அவசிய மில்லை. உங்களுடைய மார்க்கம் உங்களுக்கு நல்லது. என்னுடைய மார்க்கம் எனக்கு நல்லது. அதை சமஸ்கிருதத்தில் 'என்னுடைய இஷ்டதேவதை' யென்று சொல்வார்கள். நமக்கு எந்த மதத்தினிடமும் சண்டை கிடையாதென்பதை மனதில் வையுங்கள். நம் ஒவ்வொரு வருக்கும் அவர்கள் இஷ்ட தேவதை இருக்கின்றது. ஆனால் மற்ற வர்கள் வந்து தங்கள் மதத்தை நம்மேல் பலாத்காரமாகச் சுமத்தப் பிரயத்தனம் செய்வார்களானால், நாம் அவர்களுக்குச் சொல்ல வேண் டிய - வார்த்தைகள் சிலவுண்டு. அவர்களைப் - பார்த்தால் சிரிப்புண்டா கிறது. கடவுளை அடைவதற்காக வேறு ஒரு முறையைப் பின்பற்று கிறார்கள் என்று தோன்றுகிற காரணத்திற்காகத் தங்கள் சகோதரர் களை அழிக்க விரும்பும் மக்கள், அன்பைப்பற்றிப் பேசினால் அது எவ்வளவு அசம்பாவிதமாக இருக்கும்! ஒருவன் வேறு ஒரு முறையைப் பின்பற்றுவதைப் பார்த்துச் சகிக்க முடியாதவர்களுடைய அன்பு எத்- தகையதாக இருக்கும்! அவர்களிடம் அதிகமான அன்பு இருக்க முடி- யாது. இது அன்பானால், வெறுப்பென்பது என்ன? கிறிஸ்து, முகம் மது, புத்தர் முதலிய எவரை வழிபடும் மதத்தினரிடமும் நமக்கு

வெறுப்புக்கிடையாது. அவர்களிடம் இந்து சொல்லுகின்றான்; 'என் சகோதரனே, உன்னை வரவேற்கிறேன். உனக்கு வேண்டிய உதவிகள் செய்கிறேன். ஆனால் என்னுடைய மார்க்கத்தை, என்னுடைய இஷ்டதேவதையை நான் பின்பற்றுவதில் நீ தலையிடாதே. உன்னுடைய மார்க்கம் உனக்கு மிக நல்லதாக விருக்கலாம்; ஆனால் எனக்கு அது தீமை விளைவிக்கலாம். என்னுடைய அனுபவத்தில் ஓர் உணவு எனக்கேற்றதென்று தெரிகிறது. வைத்தியர்கள் பலர் சேர்ந்தும் அதை மாற்றி அமைக்க முடியாது. அது போல் எனக்கேற்ற முறை எது வென்பது எனக்கு அனுபவத்தில் தெரியும்.' ஆதலால் நாம் சொல்லுகிறோம்; எந்தக்கோயில், சின்னம் அல்லது விக்கிரகம் உங்களுக்குள்ளிருக்கும் தெய்வீகத் தன்மையை வெளிப்படுத்துவதற்கு உதவியாக இருக்குமென்று உங்களுக்குத் தோன்றுகின்றதோ அதை நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள். உங்களுக்கு விருப்பமானால் இருநூறு விக்கிரகங்களை வைத்துக்கொள்ளுங்கள். சில சடங்குகள் உங்களுக்கு ஆண்டவனை அடைவதில் உதவியாயிருக்கின்றன வென்றால், அவைகளைத் தாராளமாக வைத்துக் கொள்ளுங்கள். ஆனால் அவைகளைப் பற்றி சண்டை சச்சரவுகள் வேண்டாம். சண்டையிட்டுக் கொள்ள ஆரம்பித்தால் நீங்கள் அந்தக் கணத்திலிருந்து தெய்வத்தன்மையை இழந்து, மிருகத்தன்மையை அடையும் மார்க்கத்திலிருக்கிறீர்கள் என்பதை உணர்ந்து கொள்ளுங்கள்.

நமது மதம் அனைவருக்கும் இடம் கொடுக்கின்றது; எவரையும் நிராகரிப்பதில்லை. நமது ஜாதிமுறை மதத்துடன் சேர்ந்ததாகத் தோன்றினாலும், உண்மையில் அது மதத்துடன் சம்பந்தப்பட்டதல்ல. ஜாதிகள் நம் சமூகத்தைக் காப்பாற்றுவதற்காக ஏற்பட்டவை. அவை அவசியமில்லாமல் போகும் போது ஜாதிகளும் தாமாகவே மறைந்து விடும். நம்மதத்தைப்பற்றி இன்று நான் உங்களுக்குச் சொல்ல விரும்பியதைச் சொல்லி விட்டேன். தற்காலத்திற்கு மிக அவசியமான ஒரு விஷயத்தை உங்களுக்கு ஞாபகப்படுத்தி இப்பேச்சை முடிக்க விரும்புகிறேன். மகாபாரதத்தை எழுதியவரான வேதவியாசர் சொல்லுகிறார்; இந்தக் கலியுகத்தில் மிக அரியசாதனை யொன்றிருக்கிறது: மற்ற யுகங்களில் அனுஷ்டிக்கப்பட்டு வந்த தபோ முறைகளும் யோக அனுஷ்டானங்களும் இக்காலத்தில் அனுஷ்டிக்கக்கூடியனவாகவில்லை. இக்காலத்தில் நாம் செய்யக்கூடிய உயர்ந்த சாதனை தானதர்மம் தான், தானம் அனைத்தினும் உயர்ந்தது ஆத்மீக அறிவு புகட்டுதல்:

அதற்கு அடுத்தது லௌகிக அறிவு. இதற்கடுத்தது ஒருவனுடைய உயிரைக் காப்பாற்றுதல்; கடைசியாக உணவும் நீரும் அளித்தல் ஆத்மீக ஞானம் அளிப்பவன் ஆத்மாவைப் பலபிறவிகளிலும் பிறந்துழலாமல் காப்பாற்றுகிறான். லௌகிக அறிவு கொடுப்பவன் ஆத்மீக அறிவைப் பெறுவதற்கு வழிகாட்டுகிறான். மற்றத் தானங்களனைத்தும் — உயிரைக் காப்பாற்றுதல் கூட — இவைகளுக்குத் தாழ்ந்தவையாகவே யிருக்கின்றன. ஆதலால் ஆத்மீக அறிவு புகட்டுதலே நாம் ஆற்றக்கூடிய பணிகள் அனைத்திலும் சிறந்ததென்பதை நீங்கள் உணரவேண்டும். அதுதான் எல்லா உதவிகளிலும் பெரிய உதவி. நம்முடைய சாஸ்திரங்கள், ஆத்மீகப் பேரின்பவெள்ளம் பெருக்கெடுத்து ஓடும் வற்றா ஊற்றுக்களாக விருக்கின்றன. துறவு நிறைந்த இந்நாட்டில் தான் ஆத்மாவை அனுபவத்திற் கண்டறிந்த அறிஞர்கள் பலர் இருக்கிறார்கள். நான் உலகம் முழுவதும் சுற்றிப்பார்த்திருக்கிறேன்; நான் சொல்லுவதை நம்புங்கள். மற்றநாடுகளில் மதத்தைப்பற்றிப் பலர் பேசலாம்; ஆனால் மதக் கொள்கைகளை வாழ்க்கையில் பின்பற்றி அனுஷ்டிப்பவர்கள் இங்குதானிருக்கிறார்கள். பேச்சு மதமாகாது. கிளிபேசும்; இப்பொழுது இயந்திரங்களும் பேசுகின்றன. பூரணமான துறவும், ஆத்மீக உணர்ச்சியும், அந்நெறியிலே தோன்றும் கஷ்டங்களைச் சகிக்கும் தன்மையும், எல்லையற்ற அன்பும் - இவை தான் ஆத்மீக வாழ்க்கையின் அறிகுறிகளாம். இவ்வளவு உயர்ந்த கருத்துக்களும், அவைகளைத் தங்கள் வாழ்க்கையில் பின்பற்றும் பெரியோர்களும் நம்நாட்டில் நிறைந்திருக்கும் போது, இந்த உயர்ந்த லட்சியங்களை நம் நாட்டில் பணக்காரன், ஏழை, உயர்ந்தவன், தாழ்ந்தவனென்ற பேதமின்றி அனைவரிடமும் பரப்புவதுடன், வெளிநாடுகளிலும் பரப்பாமலிருப்பது பாவமாகும். இதுவே நமது கடமைகளில் தலைசிறந்ததாகும். பிறருக்குக் கொடுப்பது நம்மை மேன்மைப்படுத்துகிறது. உங்களுக்கு உங்கள் மதத்தின் பேரில் உண்மையான அன்பு இருந்தால், உங்கள் தேசத்தின் பால் உங்களுக்கு அன்பு இருக்குமானால், நீங்கள் இந்த அதிமுக்கியமான தொண்டை மேற்கொண்டு, இடைவிடாமல் முயற்சி செய்து, நம்சாஸ்திரங்களிலிருக்கும் மகத்தான செல்வமாகிய இவ்வாத்மீக உண்மைகளை, அவைகளின் உண்மையான சொந்தக்காரர்களான நம் மக்களுக்கு அளியுங்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக நாம் ஒரு விஷயத்தை உணரவேண்டியது அவசியம். நெடுங்காலமாக நாம் பொறாமையில் மூழ்கிக்கிடக்

கிறோம். இவனுக்கு ஏன் அதிகமரியாதை கிடைக்கின்றது? நான் ஏன் அதைப் பெறக்கூடாது? - என்ற இவ்விதமான பொறாமை நம் மனதில் நிறைந்திருக்கிறது. கடவுள் ஆராதனை நடக்கும் இடங்களில் கூட நாம் மற்றவர்களுக்கு முன் நிற்க விரும்புகிறோம். இதைவிடக் கேவலமான அடிமை உணர்ச்சி வேறு என்ன இருக்கமுடியும். இப்பொறாமையை அகற்ற வேண்டும். இவ்வடிமைத்தனம் தான் இந்தியாவின் பெரும்பாவம். எல்லோரும் அதிகாரம் செய்ய விரும்புகிறார்கள்; ஒருவரும் சேவை செய்ய விரும்புவதில்லை. பழங்காலத்து பிரமச்சரிய முறை போய்விட்டதனால் இவ்விதம் நேர்ந்திருக்கிறது. முதலில் கீழ்ப்படியத் தெரிந்து கொள்ளுங்கள். அதற்கு மேல் அதிகாரம் தானே வரும். முதலில் தொண்டர்களாயிருக்கக் கற்றுக் கொள்ளுங்கள். அதன் மூலம் தலைவராகும் தகுதி பெறுவீர்கள். பொறாமையை மனத்தினின்று அகற்றினால், மகத்தான காரியங்களைச் செய்யக் கூடிய சக்தி உங்களுக்கு உண்டாகும். நமது முன்னோர்கள் மிக அற்புதமான காரியங்களைச் சாதித்திருக்கின்றனர். அவைகளை நாம் இப்பொழுது மிகப் பெருமையுடனும் மகிழ்ச்சியுடனும் நோக்குகின்றோம். நாமும் மகத்தான காரியங்களைச் செய்யப்போகின்றோம். நமக்குப்பின் வருபவர்கள் பெருமையுடனும் அன்புடனும் அவைகளைப் பார்ப்பார்கள். நம் முன்னோர்கள் மிகப் பெருமைவாய்ந்த காரியங்களைச் செய்திருக்கிறார்கள், ஆண்டவனுடைய திருவருளால் இங்கு இருப்பவர்கள் ஒவ்வொருவரும் அவைகளைவிட அதிகப் பெருமையான காரியங்களைச் செய்வீர்களாக.

---

நன்றி: இலங்கையில் சுவாமி விவேகானந்தர்
(நூற்றாண்டு விழா வெளியீடு)

# என்றைக்கும் உரிய செய்தி

## தீரரின் அழைப்பு:

"நீங்கள் இறைவனின் குழந்தைகள், உலவா இன்பத்திற் பங்குடையவர்கள். புனித பூரண உயிர்கள். உலகில் வாழும் தெய்வங்களே! – பாவிகளா? ஒரு மனிதனை அங்ஙனம் அழைப்பதே பாவம்... உயரவாருங்கள், சிங்கங்களே! உங்களை ஆடுகளாக் கருதும் மயக்கத்தை உதறித் தள்ளுங்கள்; நீங்கள் அழிவற்ற ஆன்மாக்கள். விடுதலையுற்ற பேறுபெற்ற நித்திய உயிர்கள்" "நீங்கள் எல்லாம் வல்லாரின் குழந்தைகள். அளவுபடாத தெய்வத் தீயினின்றும் கிளம்பிய பொறிகள். நீங்களே அனைத்தும். நீங்கள் அனைத்தையும் இயற்ற வல்லீர்கள். எழுமின், விழிமின், குறிசாரும் வரை நில்லாது செல்லுமின்." இந்து இருடியர்கள் – முற்காலத்தினரும் தற்காலத்தினரும் – உங்களை அழைப்பது இதற்காகவே.

நித்திய வாழ்வும், வரம்பிலா அறிவும், ஒழியா இன்பமும் ஆய விழுமிய பயனை அவர்கள் பெற்றுள்ளனர்; தாம் பெற்ற இன்பத்தை உங்கள் அனைவரோடும் சேர்ந்து புசித்தற்கு விழைகின்றனர். உங்கட்கு நெறிகாட்ட ஆவலாயுள்ளனர்; நீங்கள் செய்ய வேண்டியன, அவர்கட்குச் செவிசாய்த்தலும், தீரச் செயலை ஏற்றலுமே.

## அனைவர்க்கும் நம்பிக்கை:

எவரும் விலக்கப்படுவதில்லை. ஒவ்வொருவர்க்கும் பூரணத் தன்மையடைதல் இயலும், அடைந்தே தீரவேண்டும். "என்மீது நின் மனத்தை நிறுத்துக, என்மீது அன்பால் ஈடுபடுக, எனக்காக வேள்வி இயற்றுக, என்முன் வீழ்ந்து பணிக, நீ என்னை அடைவாய் நீ எனக்குப் பிரியனாதலின் உனக்கு நான் உண்மையாகவே வாக்களிக்கிறேன். எல்லா அறங்களையும் விட்டு, என்னையே புகலாக அடைக. சோகமுறாதே. ஏனெனில் நான் உன்னை எல்லாப் பாவங்களினின்றும் விடுவிப்பேன்" – என்று பகர்வார் பகவான். (பகவத் கீதை, 18 65,66)

நீ உன்னைப் பாவியெனக் கருதினும், செயலற்று நிற்கக் காரணமில்லை. பகவான் பின்வருமாறு கீதையில் உறுதிமொழி அளிக்கிறார்: "மிக்க பாவியான மனிதனும் என்னை முழுமனதோடு வணங்குவனா

யின், அவனை நல்லானென்றே கருதல் வேண்டும்: ஏனெனில் நன்றில் அவன் உறுதி பெற்றுளான். அவன் விரைவில் நேர்மையுற்றவனாகி நிலையான சாந்தியைப் பெறுவான். குந்தி மகனே! எனது அன்பன் எந்நாளும் அழியான் எனத்துணிந்து பறையறைக." (பகவத் கீதை, 9-30, 31.)

"உன்னிடத்தும் இறைவனிடத்தும் நம்பிக்கை கொள்க. உன்னுள் இருப்பதில் ஒரு சிறிதையே நீ அறிவாய். உன் உள்ளே இருப்பது அளவற்ற சக்தியும் அழிவற்ற இன்பமும் ஆகிய கடலே." (சுவாமி விவேகாநந்தர்)

## பழமையான ஆறு:

நித்திய வாழ்வும், வரம்பிலா அறிவும், ஒழியா இன்பமும் ஆய வாழ்க்கைப் பயனை அடைய உனக்கு உதவும் பொருட்டே, நினைவுக்கெட்டாத கால முதலே இந்து சமயம் வாழ்ந்து வந்துள்ளதும், யுகந்தோறும் பெரியார் பிறவியேற்றதும் என்க. பெருஞ் சமயங்களுள் மிக்க பழமை வாய்ந்தது இந்து சமயமே; வேதங்கள் எனப்பெயர் பெறும் அதன் சாஸ்திரங்கள் மிக்க தொன்மை யுற்றனவே. சிந்தனைக்கப்பாலான நாள் தொட்டே எண்ணரிய இருடியர் தொகுத்து வைத்துள்ள அனுபூதிகளை எழுத்திற்கொண்டுள்ள நூல்களே வேதங்கள். வேதங்களின் ஸாரம் உபநிடதங்களிற் காணப்படுவது; உபநிடத போதனைகளினின்றும் கடைந்தெடுத்த நவநீதம் பகவத்கீதையிலே அடங்கியுள்ளது; இதுவே இந்துக்களின் மிகச்சிறப்புற்ற, பலர் போற்றும் சாஸ்திரமாகும்.

## வாழ்க்கையின் அறுதிப் பயன்:

மனித வாழ்வின் அறுதிப் பயனைப் பற்றிய மிக உயர்ந்த மிகச் சீரிய கருத்தை வேதங்கள் நமக்குத் தருகின்றன. அகண்ட சச்சிதானந்த வடிவாயுள்ள பிரம்மத்தின் அனுபூதியே அது; அனைத்துயிர்கட்கும் எல்லையிலா உற்பத்தியாயும் ஆதாரமாயும் இறுதியில் ஒடுங்குமிடமாயும் உள்ள ஏகமான பொருள் பிரம்மமே. அப்பொருள் ஒன்றே, ஆனால் இருடியர் அதனை விஷ்ணு, சிவன், ராமன், கிருஷ்ணன், புத்தர், காளி முதலிய பலப்பல பெயர்களால் அழைப்பர். அதே பரம்பொருளையே கிறிஸ்தவர் 'தேவன்' என்றும் முஸ்லீம்கள் 'அல்லா' என்றும் அழைப்பர். அனைவரும், தெரிந்தோ தெரியாமலோ அடைதற்கும் அறிதற்கும் உணர்தற்கும் முயன்று வருவதும்

அவரையே. எல்லா நெறிகளும் அவரையே சார்கின்றன. 'எவ்வெவ் வழியால் மக்கள் என்னை அணுகினும், அவ்வவ் வழியே அவர்களுடைய விருப்பங்களை யான் நிறைவேற்றுகிறேன். எல்லா வகையாலும் மக்கள் பின்பற்றுவது என்னைச் சாரும் நெறியையே' (பகவத் கீதை, 4-11)

## பூலோக விஜயம்:

அவர் மிகப் பெரியவற்றினும் மிகப் பெரியார், மிகச் சிறியவற்றினும் மிகச் சிறியார், எல்லா நினைவுக்கும் வருணனைக்கும் எட்டாதவர்; எனினும் தம் அடியார்கட்காக, காலம் வருந்தொறும் பற்பல வடிவங்களில் வெளிப்படுகின்றனர். நல்லாரைக் காக்கவும் தீமையைத் தடுக்கவும் சமயம் நேரும் போதெல்லாம், அடியார்களிடம் நெஞ்சார எழும் பிரார்த்தனைகள் அவரைச் சாரும்போது, அவர் இப்புவியிலே தாமே அவதரிக்கிறார். இத்தகைய அவதாரம் ஒரு குறிப்பிட்ட யுகத்தையோ தேசத்தையோ ஒருநாளும் பொறுத்துள்ளதன்று. அவர்தம் அவதாரங்கள் எண்ணில் அடங்காதன; அவசியம் தோன்றும் காலந்தோறும் இடந்தோறும் எதிர்காலத்தும் அவர் தம்மைத் தோற்றுவித்தருளுவர். அடியான் இத்தெய்வ வடிவங்களில் எதனையும் வணங்கலாகும், எதனிடத்தும் சரண்புகலாகும்; அவ்வடிவங்கள் அனைத்தின் வாயிலாகவும் ஒளிரும் இறைவர் சம அளவிற்கே அவனைக் காத்து அருள்புரிவார். இறைவனை ஒரு குறிப்பிட்ட நாமத்துக்குள்ளோ வடிவத்துக்குள்ளோ சிறைப்படுத்தி, ஒரு குறிப்பிட்ட வடிவம் பெற்றவரே - வேறெவருமல்லவர் - நிலவுலகில் அவரது அவதாரமோ மாகுரவரோ ஆவார் என்றும், இடை நின்று பரிந்து பேசும் அவரது துணையின்றி உய்வு கைகூடாது என்றும் கூறுவார் அறியாதாரே, மூடவெறி பிடித்தவரே.

## அன்பார்ந்த அன்னை:

எல்லா உயிர்களும் உள்ளொடுங்கிய தெய்வத் தன்மையை உடையன என்பதை இந்து சமயம் உணர்ந்துள்ளது; ஆனால் ஒருயிர்க்கும் இன்னொன்றுக்கும், பக்குவ முதிர்ச்சியிலும்; ஆற்றல்களும் சுவைகளும் பல்வகையாக அமைவதிலும், உண்மையான வேறுபாடு இருத்தலைக் காணாமலிருப்பதில்லை. ஆதலால், பூரணத்தன்மையெனும் பொதுவான அறுதி நிலைக்கு அனைவரையும் உய்க்கும்போதே, ஓர் அன்பார்ந்த அன்னை தன் பலதிறப்பட்ட குழந்தை

களின் வெவ்வேறான தேவைகளை உணர்ந்து இயற்றுவது போன்றே அச்சமயமும் பல்வகைப்பட்ட பக்குவ நிலைகளிலுள்ள மக்கட்கு ஏற்ற வாறு பலப்பல நெறிகளையும் முறைகளையும் விதித்துள்ளது. ஒரு சாதகனுக்குத் தனக்கு மிகவும் உகந்த இறை வடிவத்தைத் தேர்ந்து கொள்ளும் முழுச் சுதந்திரத்தை அது அளிக்கிறது. ஸ்வதர்மமும்' இஷ்ட தெய்வமும் எனப்படும் இப்பகுதி வேறெங்கும் காணா இணையற்ற தனியான அதன் பெருமைகளுள் ஒன்றாகும். குறுகிய கருத்துகளும் மூடவெறிக்குரிய ஒரேவிதத் தன்மையும் இந்து சமயத்திற்குப் புறம்பானவை.

## அனைத்தையும் தழுவும் பொதுமை:

குறியும் நெறியுமாய இரண்டையும் பற்றியவரை, இந்து சமயத்தின் வழியாவது, பயன்தரும் பொதுமையே, சமரசமே. 'வேற்றுமையுள் ஒற்றுமை' என்பதே அதன் தத்துவப் பகுதியின் அடிப்படைக் கொள்கை. ஏனைய சமயங்களையும் சமய குரவர்களையும் அது ஒப்புக்கொண்டு மதிக்கிறது; ஆனால் மதமாற்றத்தில் ஒருபோதும் நம்பிக்கை வைப்பதில்லை. இக்காரணம் பற்றியே, இந்து சமயம் ஒருகாலும் மத மாற்றத்திற்காக முயன்றதில்லை யெனினும், மேலை நாடுகளிலும் பலசிந்தனையாளர் அதன் கருத்துகளையும் குறிக்கோள்களையும் மதித்துள்ளனர்; அன்றியும், பேருக்கத்தோடு அதனைத் தமது உடைமையாகவே ஏற்றுள்ளனர்.

## அனைவர்க்கும் ஓர் இடம்:

இந்து சமயத்தின்படி, வாழ்வாவது கரந்துள்ள தெய்வத் தன்மையை வெளிப்படுத்தற்கு உதவும் ஒரு போராட்டமே. அதன் வாழ்க்கைத் திட்டத்தில் ஆதரத்தோடு அனைவர்க்கும் ஒரு மதிப்பான இடத்தை அது அளிக்கின்றது— ஆடவர் மகளிர் குழந்தைகட்கும்; ஞானி போர் செய்வோர் வணிகர் உழைப்பாளிகட்கும்; துறவியர் இல்வாழ்வோர்க்கும் இடந்தந்துள்ளது. இம்மை நலம் ஞான முன்னேற்றம் இரண்டையும் அது சம அளவிற்கு வற்புறுத்துகிறது. உயர்வற உயர்ந்த அதன் குறிக்கோளாவது; உடலில் வாழும் போதே, இவ்வுலகிலே, இங்கே இப்போதே நிறைவுத்தன்மையை எய்துதலாகும். இந்து சமயம் மறுமையில் நோக்குடையது என்பார், தாம் உரைப்பது இன்னதென அறியார்.

## நலியப்பட்டார்க்குப் புகலிடம்:

அறியாமையும் மூட வெறியும் உற்றோரால் இந்து சமயத்திற்கு அகத்தும் புறத்தும் பலவகையான தாக்கல்கள் நேர்ந்திருப்பினும், நினைவுக் கெட்டாத காலமுதல் இந்நாள்வரை அச்சமயம் செழித் தோங்கி வந்ததன் காரணம், அதன் இயல்பில் அமைந்து கிடந்த மகிமையும், உயிர்ச் சக்தியுமேயாம். ஏனைய சமயங்களைப் பின்பற்றி யவர் துன்புறுத்தப்பட்டு உயிர்காத்தற்காகத் தம் தாய் நாடுகட்கு ஓடநேர்ந்த போது, அவர்கட்குப் புகலிடம் அளித்தது இந்து சமயத் திற்கு உறைவிடமான இந்தியாவே. கிறிஸ்தவரும், யூதர்களும், பார் சியர்களும், முஸ்லீம்களும் - அனைவரும் தங்க நிழல் பெற்றது இங்கேயே.

## அந்தணைக் கடைப்பிடி:

மேலை நாட்டில் தத்துவ ஆராய்ச்சியும் சமயமும், ஒன்றுக் கொன்று முரணயிருப்பது போலன்றி, இந்து சமயத்திலே சமயமும், தத்துவ ஆராய்ச்சியும், விஞ்ஞானமும் மனமுவந்து இணைந்து வாழ்-கின்றன. அதன் சித்தாந்தமும் அனுபவமும் ஒன்றுக்கொன்று மாறு பட்டனவல்ல. மேலை நாட்டிலே மிகவுயர்ந்த நூல்வல்லாருட் சிலரது நெஞ்சார்ந்த புகழை அச்சமயத்திற்கு ஈட்டியது இவ்வியல்பே ஷாப்பன்ஹாயர் கூறுவதாவது: 'இவ்வுலக முழுதிலும், முதனூற் கல்வி யொழிந்த வேறெதுவும் உபநிடதங் கற்றலைப் போன்று அவ்வளவு நலனும் மேன்மையும் தருவதாக இல்லை. அது என் வாழ்விற்கு ஆறுதலாயிருந்துள்ளது; என் மரணத்திற்கும் ஆறுதலாகும்' மாக்ஸ்முல்லர் சொல்வதாவது: இந்தியாவிலே தத்துவ ஆராய்ச்சி இருக்க வேண்டிய முறையிலே உள்ளது; அதாவது, சமயத்தின் மறுப் பாகாது அதன் நிறைவேற்றமாதலே.'

டாய்சன் நம்மிடம் பின்வருமாறு பரிந்து வேண்டுகிறார், ஆதலாலே, வேதாந்தம்," பொய்யுறாத வடிவிலே, தூய ஒழுக்கத்திற்கு மிகத்திண்ணிய ஆதாரமாவது, வாழ்வையும் இறப்பையும் ஒட்டிய துயரங்கட்கு மிக உயர்ந்த ஆறுதல் அளிப்பது. இந்தியர்காள்! அதனை விடாது பற்றுங்கள்.' இதனை நாம் மறவாதிருப்போமாக.

இந்து சமயம் அறிகுறியாகத் திகழ்வது வலிமைக்கே - உடல் வலிமை, மனவலிமை, ஒழுக்க வலிமை, ஞான வலிமைகட்கே;

இன்னும், மன்னுயிர்க்குச் செய்யும் அன்புக்கும் பணிக்கும் - மனித வடிவில் உறையும் இறைவற்குச் செய்யும் அன்பார்ந்த பணிக்கும் - அது அறிகுறி. இதனைப் பின்பற்றியே நாம் நமக்குரிய வாழ்க்கைக் குறியை அடையவும், பிறரையும் இன்புறச் செய்யவும் திறன் பெறுவோம்.

'பொய்யினின்றும் எம்மை
மெய்க்கு உய்த்திடுக.
இருளினின்றும் எம்மை
ஒளிக்கு உய்த்திடுக.
மரணத்தினின்றும் எம்மை
அமரநிலைக்கு உய்த்திடுக.'

'விபத்தினின்றும் அனைவரும்
விடுதலை பெறுக.
நல்லது ஈதென
அனைவரும் உணர்க,
உயர் நினைவுகளே
அனைவரையும் இயக்குக
எங்கணும் அனைவரும்
இன்பம் பெறுக.'

நன்றி: பதிப்பாளர்,
ஸ்ரீராமகிருஷ்ண ஆச்சிரமம்,
பஸவங்குடி,
பங்களூர் - 4

# விவேகானந்தரின் அறவுரை

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

சோதிடத்தை மக்கள் நம்பி வருகின்றனர். அதற்கு முக்கிய இடமும் தருகின்றனர். தென்னிந்தியாவில் சக்தி வாய்ந்த ஒரு கூட்டத்தினர் இருந்தார்கள். அவர்கள் அவ்வப்பொழுது வாழ்ந்த பிரபல மனிதர்களுடைய ஜாதகங்களைக் கணித்து வைப்பது என்ற விதிமுறையை ஏற்படுத்திக் கொண்டு இருந்தார்கள். பெரிய மனிதர்கள் பிறந்ததிலிருந்து அவர்கள் வாழ்க்கையில் நிகழ்ந்தவற்றையெல்லாம் கணித்து வைத்தார்கள். அப்படி எழுதி வைத்திருந்த குறிப்புகளைப் பின்னால் வந்தவர்களுடைய வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளோடு ஒப்பிட்டுப் பார்த்தார்கள். அவ்வாறு ஆயிரம் ஆண்டுகள் குறிப்பெ- -டுத்து வந்தார்கள். அப்படிச் செய்ததில் அவர்கள் சில ஒற்றுமையைக் கண்டார்கள். அவ்வொற்றுமைகளையெல்லாம் பொது விதிகளாக்கி ஒரு பெரிய புத்தகமாகத் தயாரித்தார்கள். அக்கூட்டத்தினர் அழிந்து போய்விட்டார்கள். ஆனால் அந்தச் சோதிடர் குடும்பம் வாழ்ந்து வந்தது. அந்தப் புத்தகத்தை அவர்கள் தங்களிடம் வைத்திருந்தார்கள். இவ்வாறுதான் சோதிடக்கலை தோன்றி இருக்க வேண்டும். ஜாதகங்களில் உள்ள சிறுசிறு அம்சங்களிலும் இந்துக்கள் அளவு கடந்த கருத்தைச் செலுத்தி வருகின்றனர். இந்துக்களைக் கெடுத்து வரும் மூடப்பழக்கங்களுள் ஜாதகமும் ஒன்றாகும்.

கிரேக்கர்கள் இந்தியாவுக்கு முதன் முதலில் சோதிடத்தைக் கொண்டுவந்தார்கள். இந்துக்களிடமிருந்து அவர்கள் வானசாஸ்திரத்தை எடுத்துச் சென்றார்கள். பிறகு ஐரோப்பாவுக்கும் அவர்கள் அதை எடுத்துச் சென்றார்கள்;

பின்னால் நிகழப்போகின்ற காரியங்களை முன்கூட்டியே கூறும் சோதிடர்களை நான் கண்டு வியப்படைந்திருக்கிறேன். ஆனால் விண்மீன்களைக் கொண்டும் அல்லது அவைபோன்று சிலவற்றைக் கொண்டும் பின்னால் நிகழப்போகும் நிகழ்ச்சிகளை முன் கூட்டியே கூறினார்கள் என்று எனது அறிவு ஏற்றுக்கொள்ளவில்லை. பல சமயங்களில் அவர்கள் கூறியது முகக்குறிப்பிலிருந்து மனத்திலுள்ளதை அறிந்து சொல்பவைகளாக இருந்தன. சில சமயங்களில் அவர்கள் கூறினவை வியப்புறும் வண்ணம் இருந்தன. ஆனால் பல சமயங்களில் அவர்கள் கூறியது அபாண்டமான பொய்யாக இருந்தது.

இலண்டனில் இளைஞன் ஒருவன் என்னிடம் வருவது உண்டு. அவன் "அடுத்த ஆண்டு நான் எவ்வாறு இருப்பேன்?" என்று என்னைக் கேட்டான். ஏன் அவ்வாறு கேட்கிறாய்?" என்று நான் அவனைக் கேட்டேன். அதற்கு அவன் "நான் செல்வத்தையெல்லாம் இழந்துவிட்டேன். இப்பொழுது நான் ஏழையாய் ஆகிவிட்டேன்" என்று கூறினான். அந்த இளைஞன் போன்று பலருக்குப் பணம்தான் கடவுள். பணத்தை இழந்தவர்கள் எல்லாவற்றையும் இழந்துவிட்டதாகக் கருதி பலஹீனர்களாகிறார்கள். அத்தகைய பலஹீனர்கள் பணம் சம்பாதிப்பதற்கு எல்லாவிதமான விபரீத முறைகளைக் கையாள முயல்கின்றார்கள். அவர்கள் தாம் சோதிடம் போன்றவற்றை நாடிச் செல்கிறார்கள். இது என்விதி என்று சொல்பவர்கள் கோழைகள், மூடர்கள் எனக் கூறும் ஸம்ஸ்கிருதப் பழமொழி ஒன்று உண்டு. பலவான் எழுந்து நின்று கூறுவதாவது: "எனக்குரிய விதியை நானே வகுப்பேன்" வயதான மக்களே விதியைப்பற்றிப் பேசுவார்கள். இளைஞர்கள் பொதுவாக சோதிடத்தை நம்பமாட்டார்கள். கிரகங்களின் ஆதிக்கத்திற்குக் கட்டுப்பட்டவர்களாக நாம் இருக்கலாம். ஆனால் அதைப் பெரிதாக நினைத்துக் கொண்டிருப்பது கூடாது. சனி, செவ்வாய், இராகு, கேது என்று கிரகங்களின் அமைப்புப் பற்றிக் கூறுகின்றவர்களையும் இது போன்ற தந்திரங்களைக் கையாண்டு வாழ்கின்றவர்களையும் நாம் புறக்கணிக்கவேண்டும் என்று புத்தர் கூறுகின்றார். இந்துவாகப் பிறந்தவர்களுள் புத்தர் மிகப்பெரியவர் ஆகையால் அவர் உண்மையை உணர்ந்தே அவ்வாறு கூறியுள்ளார். எந்தக் கிரகங்கள் வேண்டுமானாலும் வரட்டும் அதனால் என்ன தீங்கு ஏற்பட்டு விடப்போகிறது? ஒரு விண்மீன் என்னுடைய வாழ்க்கைக்கு இடையூறு விளைவிக்கும் என்றால் அத்தகைய வாழ்வு ஒரு காசுக்கும் உதவாது. ஜாதகத்தில் நம்பிக்கை வைப்பதும், இது போன்ற மர்மமான விஷயங்களில் நம்பிக்கை வைப்பதும் மனத்தின் பலஹீனமாகும். ஆகவே இத்தகைய நம்பிக்கைகள் உங்கள் மனதில் முக்கிய இடம் வைக்கும் பொழுதே நல்ல வைத்தியர்களை அணுக வேண்டும். சத்துள்ள உணவை எடுத்துக்கொள்ள வேண்டும். நல்ல ஓய்வும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

ஒரு பொருளின் தோற்றத்தைப் பற்றி அறிவதற்கு அப்பொருளிடத்தே விளக்கம் பெற வேண்டும். அப்பொருளிடத்தே விளக்கம் பெற முடியுமென்றால் அப்பொருளின் புறத்தேயிருந்து

விளக்கம் காண முயல்வது அறியாமையாகும். உலகம் தன்னைத்தானே விளக்குகிறது என்றால் அந்த விளக்கத்தை அதன் வெளியே காண முயல்வது அறியாமையாகும். மானுட வாழ்வில் தோன்றும் தோற்றங்கள் பலவற்றை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள். மனிதனின் ஆற்றலைக்கொண்டு விளக்கமுடியாத தோற்றங்கள் எவற்றையேனும் எப்பொழுதாவது நீங்கள் கண்டிருக்கிறீர்களா? ஆகையால் விண்மீன்களையோ அவை போன்ற வேறு எதனையோ நாடுவதில் என்ன பயன்? என்னுடைய இக்கால வாழ்க்கை நிலைக்கு என்னுடைய சொந்த வினையே போதுமான விளக்கமாகும். ஏசுநாதரைப் பற்றியது அதுவேயாம். ஏசுநாதருடைய தந்தை சாதாரண தச்சர் என்பதை நாம் அறிவோம். எனவே அவருடைய ஆற்றலுக்குரிய விளக்கத்தை அறிவதற்கு வேறு யாரையும் நாம் அணுக வேண்டியதில்லை. அவருடைய பழைய வாழ்க்கையே அவரை ஏசுநாதராக உருவாக்கியுள்ளது. புத்தர் விலங்கு உடல்கள் பல எடுத்து இறுதியில் எவ்வாறு புத்தரானார் என்பதை அவர் கூறியிருக்கிறார். ஆகையால் நம் வாழ்க்கையைப் பற்றி அறிந்து கொள்வதற்கு விண்ணிலுள்ளவைகளை நாடுவது எதற்காக? அவைகள் நம்மீது சிறு ஆதிக்கம் செலுத்தினாலும் செலுத்தலாம்; ஆனால் அதனைப் புறக்கணிப்பது நமது கடமையாகும். அவைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து நமக்குநாமே தளர்ச்சியை உண்டுபண்ணிக் கொள்ளலாகாது. ஆன்மிகப் பலஹீனத்தையும், மனப் பலஹீனத்தையும், உடல் பலஹீனத்தையும் உண்டுபண்ணும் எதையும் உங்கள் கால் விரலால் கூடத் தீண்டுவது கூடாது என்பதை நான் உங்களுக்கு வலியுறுத்திக் கூறுகின்றேன். மனிதனிடத்திலுள்ள ஆற்றலை வெளிப்படுத்துவதே சமயமாகும். எல்லையற்ற சக்தி இந்த உடலுக்குள்ளே சுருண்டு கிடக்கிறது. அந்தச் சுருண்டு கிடக்கின்ற சக்தி தன்னைத்தானே விரிவடையச் செய்கிறது. அந்தச் சக்தி விரிவடைந்து வருகிறபொழுது நாம் எடுத்துள்ள சரீரம் போதாதபொழுது அதை உதறித் தள்ளுகிறது. இவ்வாறு பல சரீரங்களை அது உதறித் தள்ளியிருக்கிறது தான் விரிவடைவதற்கு ஏற்ப மேலான சரீரங்களை அது எடுத்துக் கொண்டே இருக்கிறது. இதுவே மானுட வாழ்வின் வரலாறு பற்றிய உண்மையாகும் சமயத்தைப் பற்றிய உண்மையும் இதுவேயாம். பண்பாட்டின் வளர்ச்சியைப் பற்றிய உண்மையும் இதுவேயாம். யாண்டும் ஆற்றலை வெளிப்படுத்திக் கொண்டே இருக்கவேண்டும். சோதிடம் போன்றவற்றில் கடுகளவு உண்மை இருந்தாலும் அதைப் புறக்கணியுங்கள். அதை நம்பி உங்களுடைய ஆற்றலை வெளிப்படுத்த தவறிவிடாதீர்கள். ஆற்

நலை அழுக்கி வைக்கும் அதிசயங்களை நம்பாதீர்கள், உங்களைப் பல றினைப்படுத்தும் மூடக் கொள்கைகளுக்கு ஒரு முழுக்குப் போடுங்கள். விண்ணில் உள்ள விண்மீன்களை நம்பியிருப்பதைவிட உங்களுக்குள் சுருண்டு இருக்கும் பேராற்றலை நம்புங்கள். அதை வெளிப்படுத்து வதற்குரிய செயல்களில் தீவிரமாக ஈடுபடுங்கள், பலம் பலம். இது தான் நமக்கு முக்கியமாகத் தேவை.

## சுவாமி விவேகானந்தரின் வீர முழக்கம்

★ ஆண்டவனைத்தேடி நீங்கள் எங்கே போகிறீர்கள்? துன்பப்படுபவர்கள். ஏழைகள், பலவீனர்கள் இவர்கள் எல்லோரும் அத்தனை தெய்வ வடிவங்களே அல்லவா? ஏன் முதலில் இவர்களை ஆராதிக்கக்கூடாது? கங்கைக் கரையில் கிணறு வெட்டப் போவது உண்டா? இந்த ஏழைகளையே உங்கள் கடவுளாகக் கொள்ளுங்கள். அவர்களைப்பற்றிச் சிந்தியுங்கள்; அவர்களுக்குத் தொண்டு செய்யுங்கள்; அவர்களுக்காக இடைவிடாமல் பிரார்த்தனை செய்யுங்கள். அப்போது ஆண்டவன் உங்களுக்கு வழி காட்டுவார்.

★ சுயநலமா இல்லையா என்பதை உனது மனச்சாட்சியையே முதலில் கேட்டு நீ தெரிந்து கொள். சுய நலம் என்பது இல்லையானால் பிறகு எதையும் நீ பொருட்படுத்த வேண்டாம், எதுவும் உன்னைத்தடை செய்ய முடியாது. செயலில் இறங்கு. அருகில் இருக்கும் செயலைச் செய்யத் தொடங்கு. அவ்விதம் செய்யச் செய்ய உண்மை உனக்கு எளிதில் புலப்படும்.

★ இதயபூர்வமாகக் காரியங்களைச் செய்பவனுக்கு இறைவனும் உதவி புரிகிறான். உன்னால் இயன்றவரையில் நற்செயல்களைச் செய்.

★ உலகில் வாழும் உயிர்களுக்குத் தொண்டு செய்வதைக் காட்டிலும் சிறந்த அறம் வேறு இல்லை. உண்மையோடு ஒருவன் இந்த ஓர் அறத்தைக் கடைப்பிடிப்பானானால் அவன் முக்தி பெறுவது நிச்சயம்.

பெ. சு. மணி அவர்கள் எழுதிய

## நூற்றாண்டு விழாக் காணும்
## சுவாமி விவேகானந்தர்
## சிகாகோ சொற்பொழிவுகள்

என்னும் நூலிலிருந்து

'எமது சமய உண்மைகளைத் தங்கள் சுயநலமற்ற சேவை மூலம் பரப்பி வருவதற்கும், சர்வசமய மாநாட்டில் வேதங்களின் உட்பொருளை விளக்கியதற்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம். தெய்வீகத்தன்மை வாய்ந்த இந்திய தத்துவ சாஸ்திரத்தை அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய தேசங்களிலே பரப்பி மேலைத் தேசங்களுக்கும், கீழைத் தேசங்களுக்குமிடையே நல்லுறவை ஏற்படுத்தியதற்கும் எமது மனமார்ந்த நன்றியைந் தெரிவிக்கின்றோம் சமய உண்மைகளில் நம்பிக்கை குறைந்து உலோகாயத கொள்கைகள் பரவி வரும் இக்காலத்தில் நமது பழம்பெரும் சமய உண்மைகளைப் பிரசாரம் செய்வதற்குத் தாங்கள் ஆரம்பித்திருக்கும் இயக்கத்திற்கும் நமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.'

வரவேற்புரையை ஏற்று சுவாமிஜி பதிலளித்ததைப் பற்றி 'இந்து சாதனம்' **சைவ சமய எழுச்சியுடன்** பின்வருமாறு வருணித்தது.

'அவர் திருவாய் மலர்ந்தருளிய திருப் பிரசங்களினது அலங்காரமே அலங்காரம்: புத்தரை வாதில் வென்ற ஸ்ரீமத்-மாணிக்கவாசக சுவாமியவர்களினது திருவவதாரமே அன்றிச் செக்கர் வானிறத்தானாகிய எம்பிரானே எமக்கு உபதேசஞ் செய்யுமாறு மானுடச் சட்டை பூண்டெழுந்தருளிய குருவடிவந்தானோ எம் முன்னே நிற்கும் வடிவமென்று ஐயுறக் கிடந்ததெனில் சுவாமி அவர்கள் மகத்துவம் எம்மாற்சொல்லுந் தகைத்தோ!

வடமராட்சியில்

# புலோலி பல நோ. கூ. சங்கம்

## தனது 25 வருட நிறைவு

# வெள்ளி விழா

மகிழ்ச்சியுடன் கொண்டாடுகின்றது

**1996**

**மேலும்**

- நுகர்ச்சி சேவைகளையும்
- வெதுப்பக பகுதி உற்பத்திகள்
- புடவை விற்பனை நிலைய சேவைகள்
- எரிபொருள் நிலைய சேவை
- கிராமிய வங்கி சேவை
- கதிரை வாடகை சேவை
- லான்ட்மாஸ்டர் சேவை
- கட்டிடப் பொருள் கூட்டுத்தாபன முகவர்கள்,

மற்றும் மக்கள் சேவைகளை

நிறைவேற்றும்

# புலோலி பல நோ. கூ. சங்கம்

*புலோலி கிழக்கு — பருத்தித்துறை.*



இப்போது எனக்கு ஒரே ஒரு விரும்பம்தான் மோலோங்கி நிற்கிறது. அது கும்பகர்ணனைப் போல உறக்கத்தில் ஆழ்ந்தும், தன் ஆண்மைத்தனத்தில் நம்பிக்கை இழந்தும், எந்த ஒரு பதில் உணர்ச்சியும் இல்லாமலும் இருக்கும் நமது நாட்டைத் தட்டி எழுப்ப வேண்டும் என்பதுதான்.

— சுவாமி விவேகானந்தர்

# சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயம் (1897 – 1997) விழாச் சிறப்புற

எமது வாழ்த்துக்கள்

## பருத்தித்துறை
# பல் நோ. கூ. சங்கம்

வி. த, நி. அச்சகம் — பருத்தித்துறை.